## டிசம்பர் – 16 – சனி

**புனித அடிலைட்**

**“எலியா ஏற்கனவே வந்துவிட்டார். அவரை மக்கள் கண்டுணரவில்லை” (மத்.17:12)**

### முதல் வாசகம் : சீராக் 48 : 1 – 4, 9 – 11

இறைவாக்கினர் எலியா நெருப்புபோல எழுந்தார் தீவட்டிபோல் அவருடைய சொல் பற்றியெரிந்தது. மக்கள் மீது பஞ்சம் வரச் செய்தார் தம் பற்றார்வத்தால் அவர்களை எண்ணிக்கையில் சிலராக்கினார். ஆண்டவருடைய சொல்லால் வானம் பொழிவதை நிறுத்தினார் மும்முறை நெருப்பு விழச் செய்தார். எலியாவே, உம்முடைய வியத்தகு செயல்களில் நீர் எத்துணை மாட்சிக் குரியவர்! உமக்கு இணையாய் யார் பெருமை பாராட்டக்கூடும்? தீச்சூறாவளியில் நெருப்புக் குதிரைகள் பூட்டிய தேரில் நீர் எடுத்துக்கொள்ளப்பட்டீர். ஆண்டவருடைய சினம் சீற்றமாய் மாறுமுன் அதைத் தணிப்பதற்கும் தந்தையின் உள்ளத்தை மகனை நோக்கித் திருப்புவதற்கும் யாக்கோபின் குலங்களை மீண்டும் நிலைநிறுத்துவதற்கும் குறித்த காலங்களில் நீர் கடிந்து கொள்வீர் என்று எழுதப்பட்டுள்ளது. உம்மைக் கண்டவர்களும் உமது அன்பில் துயில் கொண்டவர்களும் பேறுபெற்றோர். நாமும் வாழ்வது உறுதி.

**பதில்பாடல் :** கடவுளே உமது முக ஒளியைக் காட்டி எம்மை மீட்டருளும்.

### நற்செய்தி : மத்தேயு 17 : 9 – 13

அக்காலத்தில் இயேசுவும் சீடர்களும் மலையிலிருந்து இறங்கி வந்தபோது இயேசு, ”மானிட மகன் இறந்து உயிருடன் எழுப்பப்படும் வரை இக்காட்சியைப்பற்றி எவருக்கும் சொல்லக் கூடாது” என அவர்களுக்குக் கட்டளையிட்டார். அப்பொழுது சீடர்கள் அவரிடம், ”எலியாதான் முதலில் வரவேண்டும் என்று மறைநூல் அறிஞர்கள் கூறுகிறார்களே, அது எப்படி?” என்று கேட்டார்கள். அவர் மறுமொழியாக, ”எலியா வந்து எல்லா வற்றையும் சீர்ப்படுத்தப் போகிறார் என்று கூறுவது உண்மையே. ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன் ”எலியா ஏற்கெனவே வந்துவிட்டார். அவரை மக்கள் கண்டுணரவில்லை. மாறாக, தாங்கள் விரும்பியவாறெல்லாம் அவருக்குச் செய்தார்கள். அவ்வாறே மானிட மகனையும் அவர்கள் துன்புறுத்துவார்கள்” திருமுழுக்கு யோவானைப் பற்றியே அவர் தங்களோடு பேசினார் என்பதை அப்பொழுது சீடர்கள் புரிந்து கொண்டார்கள்.

**தியானம்:** இன்றைய நவநாகரீக உலகிலே மனிதத்தை, மனித மாண்பை மறந்து மனிதர்கள் மனசாட்சியற்ற மரங்களாக மாறிப்போனார்கள். ஒவ்வொருவரும் தங்களுடைய சுயநலன்களுக்காக உண்மையை நீதியை விற்றுப் போடுகின்றார்கள். “இம்மக்களின் நெஞ்சம் கொழுத்துப் போய்விட்டது. காதும் மந்தமாகிவிட்டது. இவர்கள் தம் கண்களை மூடிக்கொண்டார்கள், எனவே கண்ணால் காணாமலும் காதால் கேளாமலும் உள்ளத்தால் உணராமலும் மனம் மாறாமலும் இருக்கின்றார்கள்” (மத் 13:15) பாவ மன்னிப்பால் வரும் மீட்பை அவர்தம் மக்களுக்கு அறிவித்து ஆண்டவருக்கான வழியைச் செம்மைப்படுத்த இயேசுவுக்கு முன்னோடியாய் பழைய ஏற்பாட்டு எலியா போன்று புதிய ஏற்பாட்டு திருமுழுக்கு யோவான் அனுப்பப்பட்டார். பாவமன்னிப்பு இல்லாமல் மீட்பு இல்லை. நாம் இன்று இருப்பதுபோலவே இருந்து கொண்டு கடவுளின் அருளைப் பெறலாம் என்று கனவு காணக்கூடாது. “நீங்கள் பழைய இயல்பையும் அதற்குரிய செயல்களையும் களைந்துவிட்டு புதிய மனித இயல்பை அணிந்திருக்கிறீர்கள். அவ்வியல்பு தன்னை உண்டாக்கினவரின் சாயலுக்கேற்ப புதுப்பிக்கப்படுகின்றது” (கொலோ.3:9-10). நமது மனங்கள், உணர்வுகள் புதிப்பிக்கப்பட எலியாவைப்போன்று, திருமுழுக்கு யோவான் போன்று செப வைராக்கியம் கொண்ட மனிதர்களாக மாற வேண்டும். வாழ்க்கையில் வரும் துன்பங்களை, போராட்டங்களை, எதிர்ப்புக்களை கண்டு அஞ்சாமல் கடவுளுக்காய் வைராக்கியமாய் நிற்க அவர்களுடைய செப ஆற்றல் அவர்களுக்கு உதவியாக இருந்தது. கடவுளோடு பேசி கடவுளின் திடமளிக்கும், உயிரளிக்கும், ஆற்றலளிக்கும் தூய ஆவியின் துணை கொண்டு வாழ்வின் போராட்டங்களை வெல்லக் கற்றுக்கொடுத்தவர்கள் அவர்கள். எனவே அவர்களைப் போன்று இயேசுவுக்காய் நம்முடைய வாழ்வை ஆயத்தம் செய்ய செப வீரர்களாக நாம் மாற வேண்டும். உயர்விலும் தாழ்விலும், வீழ்ச்சியிலும், எழுச்சியிலும் கடவுளின் வலக்கரத்தை உணர்ந்த இவ்விரு விவிலிய கதாபாத்திரங்களைப் போன்று நம் வாழ்வின் ஒவ்வொரு கட்டமும் உம்முடைய கரங்களில்தான் இருக்கின்றது என்று கடவுளிடம் சரணாகதி அடைந்து நம்முடைய விசுவாசத்தால் உலகை வெல்ல வேண்டும். “கடவுளிடமிருந்து பிறக்கும் அனைத்தும் உலகை வெல்லும்ளூ உலகை வெல்வது நம் நம்பிக்கையே” (1யோவா.5:4).